பேட்டவாய்த்தலையிலுள்ள பயணியர் விடுதி

*213 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி வட்டம், பேட்டவாய்த்தலையிலுள்ள பயணியர் விடுதியைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) திருச்சி மாவட்டம் பேட்டவாய்த்தலை ஆய்வு மாளிகையை சிறப்புப் பழுது பார்ப்பதற்காக ரூ. 8,400-க்கு மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலை முடிவடைந்து விட்டது. மின் இணைப்பு வழங்குவதற்காக ரூ. 9,700 மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலை முடியும் தறுவாயில் உள்ளது.

கதர் பட்டு

*214 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970-71, 1971-72-ல் கதர் வாரியத்தால் வாங்கப்பட்ட கோரா பட்டின் மதிப்பு என்ன?

(இ) அப்படி வாங்கப்பட்ட கோராப்பட்டின் தரத்தை பரிசீலிப்பவர் யார்?

(உ) கதர்ப்பட்டின் தரம் குறைந்திருப்பதாக அரசுக்கு புகார்கள் ஏதாவது வந்துள்ளனவா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம் 1970-71-ம் ஆண்டில் ரூ. 29,94,000 மதிப்புள்ள கோராப்பட்டும், 1971-72-ம் ஆண்டில் ரூ. 21,41,073 மதிப்புள்ள கோராப்பட்டும் வாங்கியது.

(இ) வாரியத்தால் நியமிக்கப்பட்ட ஒரு கொள்முதல் குழு கோராப் பட்டின் தரத்தை பரிசீலிக்கிறது.

(உ) கதர்ப்பட்டின் தரம் குறைந்திருப்பதாக எந்தவித புகாரும் வரவில்லை.